**செய்தி வெளியீடு எண்: 07/10/2020** **நாள்: 27.10.2020**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வார நிகழ்ச்சி இன்று (27.10.2020) தொடங்கியது**

ஊழல் கண்காணிப்பிற்கான நாட்டின் உச்ச அமைப்பாக உள்ள மத்திய கண்காணிப்புக் குழு நாட்டின் பொது வாழ்வில் நேர்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வார நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இவ்வாண்டும், "விழிப்புணர்வு இந்தியா, செழிப்பான இந்தியா" என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வார நிகழ்ச்சிகள் இன்று (27.10.2020) தொடங்கி வருகின்ற 02.11.2020 வரை நடைபெறுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஒருமைப்பாடு உறுதிமொழியை ஏற்றனர். இந்நிகழ்வின் போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் அலுவலர்களின் பயன்பாட்டிற்காக அரசு இணையவழி சந்தை மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்வதற்கான அரசு இணையவழி சந்தை வழிகாட்டுதல்கள் கையேடு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்களால் இயக்குநர் (திட்டங்கள்), திரு. ராஜீவ் நாராயண் திவேதி மற்றும் இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) திரு. ராஜேஷ் சதுர்வேதி ஆகியோர் முன்னிலையில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தலைமைப் பொது மேலாளர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வார நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் அதன் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பல்வேறு நிகழ்வுகளை இணையவழி வாயிலாக நடத்த திட்டமிட்டுள்ளது;

a) அக்டோபர் 28, 2020 அன்று அரசு இணையவழி சந்தை / கொள்முதல் நடைமுறைகள் குறித்த இணையவழி வினாடி-வினா போட்டி.
b) அக்டோபர் 29, 2020 அன்று "விழிப்புணர்வு இந்தியா, செழிப்பான இந்தியா" என்ற தலைப்பில் இணையவழி விவாத போட்டி.
c) அக்டோபர் 31, 2020 அன்று அரசு இணையவழி சந்தை குறித்த இணையவழி கருத்தரங்கம்.

இதனைத் தொடர்ந்து, ஊழல் இல்லாத இந்தியாவை உருவாக்குவதன் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் நிர்வாகக் கட்டடத்திலும் விழிப்புணர்வு சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**